DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு. சீனிவாசன் | Father/Husband Name : பொன்னுராஜ் |
| Age : 58 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : சிறப்பு சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24.07.2026.

(Accused present.)

**<u>முதல் விசாரணை</u>** :-

1. நான் தற்போது அம்மாபட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. அம்மாபட்டி காவல் நிலையத்தில் பணியாற்றிய சார்பு ஆய்வாளர் திரு.ராஜ்குமார் என்பவரையும், அவருடைய கையெழுத்தும் எனக்கு நன்கு தெரியும். அவர் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்னர் புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து ஆவணங்களின் அடிப்படையில் என்னால் சாட்சியம் அளிக்க முடியும்.

3. கடந்த 03.01.2021 ம் தேதி 09.30 மணிக்கு அம்மாபட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் திரு. ராஜ்குமார் நிலைய அலுவலில் இருந்தபோது சுந்தரகுடும்பன்பட்டி லட்சுமணப்பெருமாள் மகன் ராஜா என்பவர் நிலையம் ஆஜராகி தன் அப்பாவை 01.01.2021 ம் தேதி இரவு 07.00 மணியளவில் அவரது அண்ணன் அழகுபாண்டி வீட்டு முன்பு வைத்து தகாத வார்த்தையால் பேசி, வேலிக்கம்பை வைத்து தாக்கி காயப்படுத்தி தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக கூறி நடவடிக்கை எடுக்க ராஜா அவரது அப்பா லட்சுமண பெருமாளிடம் புகார் மனு எழுதி வாங்கி நிலையம் கொண்டு வந்து கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மை கேற்ப தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 01/2021 பிரிவுகள் 294(b), 323, 506(2) இ.த.ச -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையுடன் அசல் புகார் மனுவை இணைத்து கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். (**<u>புகார் மனு அ.சா.ஆ. 3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது</u>**).

4. பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 03.01.2021 ம் தேதி 10.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சோலைசெல்வமாறன் மற்றும் செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **<u>(பார்வை மகஜர் அ.சா.ஆ. 5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது</u>).** மேலும் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் 11.15 மணிக்கு சம்பவ இடத்தில் கிடந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய சுமார் 105 செ.மீ உயரமும், 10 செ.மீ சுற்றளவும் கொண்ட வேலிக்கம்பு ஒன்றை அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். (**<u>அத்தாட்சி அ.சா.ஆ.7 ஆகவும், சுமார் 105 செ.மீ உயரமும், 10 செ.மீ சுற்றளவும் கொண்ட வேலிக்கம்பு அ.சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யயப்படுகிறது</u>**).

5. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் இலட்சுமணப்பெருமாள், சண்முகராணி, லட்சுமணன், ராஜா, செல்வராஜ் மற்றும் சோலைசெல்வமாறன் ஆகியோர்களை

தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. இவ்வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் 03.01.2021ம் எதிரி அழகுபாண்டியை கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்துள்ளார். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார் (**படிவம் –91 அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

7. வழக்கில் காயம்பட்ட சாட்சி இலட்சுமணப்பெருமாளுக்கு முதல் சிகிச்சையளித்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் அருண் அவர்களை விசாரணை செய்து அவரிடமிருந்து விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று பெற்று அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். **(விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் காயம்பட்ட சாட்சி இலட்சுமணப்பெருமாளுக்கு மேல் சிகிச்சை அளித்த தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் பொன்தனலட்சுமி அவர்களை விசாரணை செய்து அவரிடமிருந்து சாட்சி இலட்சுமணப்பெருமாளுக்கு அளித்த சிகிச்சை விபரக் குறிப்புகளை பெற்று அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார் (**அந்த சிகிச்சை விபரக்குறிப்புகள் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

8. இலட்சுமணப்பெருமாளுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவர்கள் சான்று வழங்கியுள்ளதால் வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(b), 323, 506(2) இ.த.ச விலிருந்து 294(b), 325, 506(2) இ.த.ச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

9. பின்னர் தனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்து எதிரி மீது 294(b), 325, 506(2) இ.த.ச ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

10. பொய்யான புகார் மனு பெற்று, எதிரிக்கு எதிராக இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் எதிரிக்கு எதிராக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கும் எதிரிக்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. சாட்சி இலட்சுமணப்பெருமாளுக்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிரிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

24 Jul 2026

(Sd/-Thiru.S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy // P.P